முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

# ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்**

**பிலவ வருடம் கார்த்திகை மாதம் 12ம் திகதி முதல் கார்த்திகை மாதம் 19ம் திகதி வரை**
**(28.11.2021 ஞாயிறு முதல் 05.12.2021 ஞாயிறு வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. ஆறுமுகனாரின் அவதார சூட்சும
அண்ணலே ஆறுமுக அரங்கனே
வருங்கால பலனாக வார ஆசிதனை
வையகத்தில் இந்தியா தமிழகம் தன்னில்
2. தன்னிலே பிலவதேள் திங்களில்
தக்க வியதிகதி மேல் மூவாறோர் திகதிவரை
இன்னாளில் நடக்கும் நிகழ்வாக கேட்க
இயம்பிடுவேன் அகத்தியனும் இனிதே
3. இனிதே ஞானவான்கள் ஆளுமை
இயல்பான வகையில் கண்டால்தான்
இனிமேல் இந்தியா தமிழகம் தானும்
இயற்கை வழிஅழிவிலா பாதுகாப்பை பெறும்
4. காப்புத்தரா சுயநலம் படவே
கட்சி வளரவும் கழகம் வளரவும்
ஒப்புக்கான ஆளுமை தன்னை
ஒன்றியம் மாநிலமென அரசுகள்
5. அரசுகள் மக்கள்நலம் பேணா
ஆளுமை ஆபத்தாகத் தொடர்ந்தால்
பெருநகரங்கள் அனைத்தும் இனி
பேரிடர் பெருவெள்ளமெனக் கண்டு
6. கண்டுமே அழிவைக் காணும்
கருணை கொள்ளா அதிகாரவர்க்கமும்
தொண்டதனை மறந்து விட்டு
துறையை ஊழல்பட நடத்தினால்
7. நடத்தினால் வளர்ச்சித் தேங்கி
நட்டமானச் சூழலே தொடரும்
இடரென அரசுத்துறை என்பதும்
இல்லாமல் போய் திடமின்றி வாடநேரும்

8. நேருமைபட பெண்கள் உரிமை
நிலமதனில் பாதுகாப்புமிக்கதாக இருக்க
வருமுலகில் இந்தியா தமிழகம்
வளர்ச்சி நிலைக்குச் செல்லும்

9. செல்லவே கலித்துன்பமென
செப்பிடுவேன் பெண்கள் மேலான
அல்லல்தரும் வன்கொடுமைக்கு
அரசின் நடவடிக்கை கடுமையாக

10. ஆகவே நீதி அரசர் வழி
ஆளுமை திடம் காண்கவே
வகைபட பெண்களின் பாதுகாப்புக்கு
வல்லமையான உறுதி கண்டுவிட

11. கண்டுவிட அரசின் மேலானதயவு
கந்தவேலன் சக்தியாக இறங்கி
உண்டாகும் ஞானஆட்சிக் காலமாக
உயர்ந்திட அரங்கஞானி ஞானவழிக்கு

12. ஞானவழிக்கு ஆளுமைகள் வர
நல்கிய பேரிடர் ஆபத்து விலகி
தானதருமம் நிறைந்த ஞானபூமியாக
தமிழகம் இந்தியா நிலை உயரும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

பிலவ வருடம் கார்த்திகை மாதம் 12ம் நாள் 28.11.2021 ஞாயிற்றுக் கிழமை முதல் கார்த்திகை மாதம் 19ம் நாள் 05.12.2021 ஞாயிற்றுக் கிழமை முடிய உள்ள கால நிகழ்வுகள் :

முருகப்பெருமானின் சூட்சும அவதார மகா ஞானியே அண்ணலே ஆறுமுக அரங்க மகா தேசிகரே தாம் அகத்திய மகரிஷி எம்மிடம் வருங்கால பலன் கேட்க யானும் இந்தியா தமிழகத்தில் கார்த்திகை மாதம் 12ம் நாள் 28.11.2021 ஞாயிற்றுக் கிழமை முதல் கார்த்திகை மாதம் 19ம் நாள் 05.12.2021 ஞாயிற்றுக் கிழமை முடிய உள்ள கால நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

தேசத்தினில் மக்கள் எல்லாம் ஞானிகள் வழிபாடுகளைச் செய்து நாட்டினில் ஞானிகள் துணையுடன் ஆட்சி செய்தால்தான் இயற்கையின் மூலமாக உண்டாகும் இயற்கை சீற்றங்கள், பேரிடர்களில் இருந்து தேசத்தை பாதுகாக்க முடியும். அதை விடுத்து தலைமை பொறுப்பில் உள்ளோர் தங்களது கட்சி வளர வேண்டும் என்ற நோக்கிலே பொதுநலம் கருதாமல் சுயநலமாக செயல்பட்டால் மத்திய மாநில அரசுகள் மக்கள் நலம் கருதாமல் சுயநலமாக ஆட்சி செய்தால் நாட்டினில் உள்ள பெருநகரங்கள் இயற்கை பேரிடரை சந்திக்கும் வெள்ள அபாயம் உண்டாகும். அழிவை சந்திக்க நேர்ந்திடும்.

அதிகார வர்க்கத்தில் உள்ளவர்கள் மக்கள் மீது கருணை கொள்ளாமல் சேவை மனப்பான்மை மறந்து தொண்டுகளாக பணி செய்யாமல் தாம் சார்ந்த துறையில் ஊழல் செய்தால் துறைகளின் வளர்ச்சி பாதித்து நஷ்டங்கள் உண்டாகி மேல்மேலும் பாதிப்படையும். அதனால் அரசு துறைகள் செயல்பட முடியாமல் போய் துறைகளை கலைக்கும்படியான சூழல்கூட உருவாகி துறைகள் என்பது இல்லாமல் போகக்கூடிய நிலையும் உருவாகலாம்.

பெண்களுக்கான உரிமைகள் அரசால் பாதுகாக்கப்பட வேண்டும். அவ்விதம் நடந்திட இந்தியதேசம் வளர்ச்சி நிலைக்கு செல்லும். பெண்கள் மீதான வன்கொடுமைகளுக்கு அரசு கடுமையான நடவடிக்கைகளை குற்றம் புரிந்தோர் மீது எடுக்க வேண்டும். நாட்டின் நீதி வழங்கல் என்பது உறுதியாக செயல்பட்டு நீதிஅரசர்கள் மூலம் கடுமையான நடவடிக்கைகளை அரசு எடுத்து முறையாக பெண்களின் பாதுகாப்பிற்கு உறுதி செய்ய வேண்டும்.

இவ்விதம் அரசு நாட்டில் உள்ள பெண்களுக்கு பாதுகாப்பும் தயவும் செய்திட தாயினும் மேலான அன்புடைய ஞானபண்டிதன் முருகப்பெருமானின் தயவு அவர்களுக்கும், நாட்டிற்கும், ஆளுமைக்கும் கிடைத்து முருகப்பெருமானின் சக்தி இறங்கி நாட்டினில் ஞானஆட்சி உதயமாகும்.

ஞானஆட்சி உருவாகிட தயவே வடிவான ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தூய ஞானநெறி கொள்கைகளை ஆட்சிபுரிவோர் ஏற்று சன்மார்க்க நெறி நின்று ஆட்சி புரிந்திட நாட்டை அனுகும் இயற்கை பேரிடர்கள் எல்லாம் விலகி தானதருமம் தேசமாக ஞானம்மிகுந்த தேசமாக மாறி தமிழகம் இந்தியா நிலைஉயரும் வல்லமை பெறும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–